தொடர்ந்து, கூட்டுறவு சங்கச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன். சம்பந்தப் பட்டவர் எழுதியிருந்தார்கள். அது என்னவென்றால், "அரசாங்கத் துக்கு 23—7—1968-ல் விண்ணப்பித்துக் கொண்டதின்பேரில், காருண்யமுள்ள சர்க்கார், அண்ணா அவர்களின் சர்க்கார், என் மீது நம்பிக்கை வைத்து, மேற்படி வழக்கை வாபஸ் பெற உத்தரவு செய்தார்கள். அதற்கு நான் நன்றியுடையவன் ஆவேன். சங்கத்தின் நிர்வாகத்தைக் குறித்து மீண்டும் நடவடிக்கை எடுத்திருப்ப தாகக் கேள்விப்பட்டு வருந்துகிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பொதுச் சேவை செய்பவன் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டாமென்று உத்தரவு இட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்." நான் சொன்னது, கிரிமினல் வழக்குகளை, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்கு உட்பட்டுத் திரும்பப் பெற்றிருக்கிறோம். இந்தக் கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுப்ப தற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம்: மேற்கூறிய கூட்டுறவு ஸ்டோரின் தலைவராக இத்தனை ஆண்டுகளாக இருந்தவர் யார்? கையாடல் செய்யப்பட்ட பணம் வசூலாகி விட்டதா?

(பதில் இல்லை).

பூலா வட்டி ஊராட்சி கூட்டுறவு பண்ணை

*247 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா பூலா வட்டி பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு பண்ணையினால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் என்ன?

(இ) தனித் தணிக்கை அதிகாரியை நியமித்து இப்பண்ணை யில் கணக்குகளை தணிக்கை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (அ) கோவை தாலூக்கா பூலாவட்டி பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு பண்ணையைப் பற்றியது இந்த வினா. இந்தச் சங்கத்தினால் அரசுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) இல்லை. சங்கத்தின் கணக்குகளை தணிக்கை செய்து முடிக்குமாறு கூட்டுறவு தணிக்கை அதிகாரிக்கு உத்தரவிடப் பட்டிருந்தது. தனித் தணிக்கை தேவையில்லை. அரசு இந்தச் சங்கத்திற்கு 45,000 ரூபாய் கொடுத்திருக்கிறது. அதிலேயும் 20,000 ரூபாய் வரவேண்டியிருக்கிறது. சங்கத்திலே வருஷா வருஷம் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அது சங்கத்தின் கணக் கிலே இருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Whereas the Co-operative Societies Act as it is today is found to be defective and has got loopholes, taking advantage of which people are tempted to commit

1970 மார்ச் 6]

mistakes will the Government think of plugging the loopholes by bringing in a new comprehensive legislation as soon as the committee that has been appointed by the Government on this issue gives its report?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபடி இப்பொழுதுள்ள சட்டத்தில் ஓட்டைகள் சில இருக்கின்றன. இப்பொழுது சட்ட இலாகாவிலே கூட்டுறவுத் துறைக்கு என்று தனியாக ஒரு பிரிவை நமது சட்ட அமைச்சர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரிவு இயங்கி வருகிறது. அந்தப் பிரிவு இப்பொழுதுள்ள சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைப்பது மட்டுமல்லாமல், இந்தக் கமிட்டியின் சிபாரிசுகளையும் கவனித்து, ஒரு சட்டம், காம்ப்ரெஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பண்ணை கணக்குகளை தணிக்கை செய்வதற்கு உத்தரவிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது உத்தரவிடப்பட்டது? கடன் எப்பொழுது வழங்கப்பட்டது? அப்படி இருக்கும்பொழுது கூட்டுறவுப்பண்ணையை வேறு ஒருவருக்குக் குத்தகைக்கு விடுவதற்கு இந்த அரசின் சட்டம் இடம் தருகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கூட்டுறவு விவசாயப் பண்ணைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிற நிலம் 105 ஏக்கர். இது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளது. அதற்குக் கடனாக அரசு கொடுத்தது ரூ. 45,000. அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக திருப்பிக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் அரசுக்குத் தர வேண்டிய தொகை, தோராயமாகக் கூறுகிறேன், ரூ. 20, 000. ஆனால், அந்த சங்கத்தினுடைய கணக்கைப் பார்க்கிறபொழுது ஆண்டுதோறும் நஷ்டமாக இருக்கிறது. ஆகையினால், மீண்டும் அதை நன்றாக தணிக்கை செய்து, மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், அது எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் கூட்டுறவுப் பண்ணைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லை என்று கூறினார்கள் அமைச்சர் அவர்கள். சொஸைடிக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஒரு வருடத்தில் ஏற்பட்டது ரூ 3,370. அதற்கு அடுத்த வருடம் ஏறத்தாழ ரூ. 1,000 இன்னும் அதற்கு அடுத்த வருடம் ரூ. 2,000 சொச்சம். இம்மாதிரி வருடந்தோறும் நஷ்டம் காண்பிக்கப்பட்டது.